பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4ங

13 05 2025                    6 45

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருப்பது முடிவல்ல என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. பாகிஸ்தானுடன் பேச்சு நடத்த வேண்டுமானால், அது தீவிரவாதம் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு கஷ்மீர் குறித்து மட்டுமே இருக்க முடியும் என்று இந்தியா திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.

3. நாட்டின் பாதுகாப்பில் தீரத்துடன் செயல்பட்டு, சிறப்பாக செயல்பட்ட இந்திய பாதுகாப்புப் படையினருக்கு உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா பாராட்டு தெரிவித்துள்ளார்.

4. பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் நேற்று நீலகிரி மாவட்டம் உதகை சென்றடைந்தார்.

5. ஐபி.எல். கிரிக்கெட் போட்டி வரும் 17ஆம் தேதி மீண்டும் தொடங்கும் என்று பி.சி.சி.ஐ அறிவித்துள்ளது.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருப்பது முடிவல்ல என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கை தொடர்பாக நாட்டு மக்களிடையே நேற்று உரையாற்றிய அவர், பாகிஸ்தானின் எதிர்கால செயல்பாடுகள் குறித்து இந்தியா தொடர்ந்து கண்காணிக்கும் என்று கூறினார்.

அந்நாடு அளித்த உறுதிப்பாட்டிற்கு ஏற்ப அதன் செயல்பாடுகளை உறுதி செய்ய வேண்டும் என்று அவர் கூறினார்.

ஆபரேஷன் சிந்தூர் தொடங்கப்பட்டு முதல் 3 நாட்களுக்குள் பாகிஸ்தான் எதிர்பார்த்ததைவிடவும் அதிக சேதங்களை எதிர்கொண்டதாக பிரதமர் குறிப்பிட்டார்.

இந்தியா மேற்கொண்ட வலுவான பதிலடி தாக்குதல் மூலம் ஏற்பட்ட பதற்றத்தை தணிப்பதற்கு உலகளாவிய நாடுகள் மூலம் வேண்டுகோள் விடுத்ததை அவர் சுட்டிக்காட்டினார்.

மிக அதிக அளவிலான இழப்புகள் ஏற்பட்ட நிலையில் கடந்த 10ஆம் தேதியன்று, இந்திய ராணுவ தலைமை இயக்குநரை பாகிஸ்தான் ராணுவம் தொடர்பு கொண்டதாகவும் பிரதமர் கூறினார்.

இந்தியாவுக்கு எதிரான ராணுவ நடவடிக்கை மற்றும் அனைத்து தீவிரவாத செயல்பாடுகளையும் நிறுத்திக்கொள்வதாக அந்நாடு உறுதி அளித்தது என்றும் பிரதமர் கூறினார்.

அதனைத் தொடர்ந்தே பாகிஸ்தானின் தீவிரவாத மற்றும் ராணுவ நிலைகள் மீதான பதிலடி தாக்குதலை இந்தியா தற்காலிகமாக நிறுத்த முடிவு எடுத்ததாக அவர் கூறினார்.

இந்த தாக்குதல் என்பது வெறும் பெயர் மட்டுமல்ல, கோடிக்கணக்கான இந்திய மக்களின் உணர்வின் வெளிப்பாடு என்றும், இந்த நடவடிக்கை மூலம் நீதி வழங்குவதற்கான உத்தரவாதம் ஏற்பட்டிருப்பதாக பிரதமர் தெரிவித்தார்.

தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் கொள்கையை உறுதி செய்யும் வகையில் ஆபரேஷன் சிந்தூர் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவித்த அவர், புதிய வலுவான தாக்குதலாக இது அமைந்தது என்றார்.

இந்த தசாப்தம் போருக்கானது அல்ல என்பதில் இந்தியா உறுதியுடன் இருப்பதாக கூறிய அவர், அதேநேரத்தில் தீவிரவாதத்தையும் ஏற்க முடியாது என்று திட்டவட்டமாகக் கூறினார்.

பாகிஸ்தான் ராணுவமும், அந்நாட்டு அரசும் தொடர்ந்து தீவிரவாதத்தை ஊக்குவித்து வருவதாக அவர் குறை கூறினார்.

தீவிரவாத கட்டமைப்புகளை முழுவதுமாக அழிக்காத வரை அந்நாடு அமைதிக்கான பாதையில் ஒருபோதும் செல்ல முடியாது என்று பிரதமர் கூறினார்.

பேச்சுவார்த்தையும், தீவிரவாதமும் இணைந்திருக்க முடியாது என்பதில் இந்தியா உறுதியான நிலைப்பாட்டை கொண்டிருப்பதாகவும், அதேபோல் தீவிரவாதத்துடன் வர்த்தகம் தொடர்வது இயலாதது என்றும் திரு. நரேந்திர மோடி கூறினார்.

பாகிஸ்தானுடன் எந்தவொரு பேச்சுவார்த்தையானாலும் அது முற்றிலுமாக தீவிரவாதம் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு கஷ்மீர் ஆகியவை குறித்துதான் என்பதை உலக நாடுகளுக்கு இந்தியா உறுதிபட தெரிவித்துவிட்டதாக பிரதமர் குறிப்பிட்டார்.

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையை தீரத்துடன் நடத்திய இந்திய பாதுகாப்புப் படையினர், உளவு அமைப்புகளை தாம் பாராட்டுவதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

<<<<>>>>

நாட்டின் பாதுகாப்பில் தீரத்துடன் செயல்பட்டு, தன்னலமற்ற பணிகளை நிறைவேற்றிய இந்திய பாதுகாப்புப் படையினருக்கு உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா பாராட்டு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், எதிரிகளை அழித்து நாட்டுக்கு கேடயமாக திகழ்ந்த பாதுகாப்புப் படையினருக்கு தாம் மரியாதை செலுத்துவதாகவும், பஹல்காம் தீவிரவாத தாக்குதலில் உயிரிழந்தவர்களின் ஆன்மா சாந்தியடையும் வகையில் நீதி வழங்கிய பிரதமரின் சீர்மிகு தலைமையை பாராட்டுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் எந்தவொரு எதிரியும் தண்டனையில் இருந்து தப்ப முடியாது என்பதை பிரதமர் திரு. நரேந்திர மோடி எப்போதும் நிரூபித்து வருவதாக தெரிவித்துள்ள திரு. அமித் ஷா, எல்லைப் பாதுகாப்புப் படையினரின் உறுதிமிக்க செயல்பாடுகள் பாராட்டுக்குரியவை என்று கூறியுள்ளார்.

இதேபோல் பிரதமர் திரு. நரேந்திர மோடி நாட்டு மக்களிடையே ஆற்றிய உரையை சமூக வலைதளத்தில் பாராட்டியுள்ள வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர், ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை மூலம் அரசு மக்களுக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றியுள்ளது என தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை தொடங்கிய பின்னர் அமெரிக்க துணை அதிபர் திரு. ஜேடி. வான்ஸ், பிரதமர் திரு. நரேந்திர மோடியுடன் தொடர்பு கொண்டு பேசினார்.

அதன் தொடர்ச்சியாக அமெரிக்க வெளியுறவு அமைச்சர் திரு. மார்கோ ரூபியோ, வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கருடனும், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு. அஜித் தோவலுடனும் கடந்த 10ஆம் தேதி பேசியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

எனினும் இந்தப் பேச்சுவார்த்தையின்போது வர்த்தகம் தொடர்பான எந்த ஆலோசனையும் நடைபெறவில்லை என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

<<<<>>>>

முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் நீலகிரி மாவட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக நேற்று உதகை சென்றடைந்தார்.

அங்குள்ள தெப்பக்காட்டில் யானைப் பாகன்கள், உதவியாளர்களுக்கான வீடுகளை திறந்து வைப்பது உள்ளிட்ட நிகழ்ச்சிகளில் பங்கேற்க இருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

மாநிலம் முழுவதும் அனைத்து நகராட்சிப் பகுதியில் உள்ள மண் சாலைகள் இந்த ஆண்டு இறுதிக்குள் தார் சாலைகளாக மாற்றப்படும் என்று மாநில அமைச்சர் திரு. கே.என். நேரு கூறியுள்ளார்.

தென்காசி மாவட்டம் சங்கரன் கோவிலில் 9 கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டுள்ள புதிய பேருந்து நிலையத்தை திறந்து வைத்துப் பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

மக்கள் தொகைக்கு ஏற்ப புதிதாக நகராட்சிகள் உருவாக்கப்பட்டு வருவதாகவும், மாநிலம் முழுவதும் அனைத்துப் பகுதிகளுக்கும் சீரான குடிநீர் கிடைக்க அரசு நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் திரு. துரைமுருகன் கூறினார்.

<<<<>>>>

வேலூர் மாவட்டம் காட்பாடியில் 3 தொழிற்பேட்டைகள் அமைய உள்ளதாகவும், இதன் மூலம் ஆயிரக்கணக்கானோருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்றும் மாநில அமைச்சர் திரு. துரைமுருகன் தெரிவித்துள்ளார்.

காட்பாடியில் நேற்று நடைபெற்ற மாநில அரசின் சாதனை விளக்கப் பொதுக்கூட்டத்தில் பேசிய அவர், பாலாற்றின் குறுக்கே மேலும் சில தடுப்பணைகள் கட்டப்பட்டு வருவதாகவும், இதன் மூலம் எப்போதும் தண்ணீர் இருக்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

காட்பாடியில் மற்றொரு ரயில்வே மேம்பாலம் கட்டுவதற்கு அடுத்தவாரம் அடிக்கல் நாட்டப்படும் என்றும் திரு. துரைமுருகன் தெரிவித்தார்.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

அமெரிக்க அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப் அரசுமுறைப் பயணமாக இன்று சவுதி அரேபியா ரியாத் செல்கிறார்.

------------

ஜம்மு-கஷ்மீரில் இன்று முதல் பள்ளிகளை திறக்க யூனியன்பிரதேச அரசு முடிவு செய்துள்ளது.

------------

சத்தீஸ்கர் மாநிலத்தில் மத்திய அரசு திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து ராய்பூரில் வேளாண்துறை அமைச்சர் திரு. சிவ்ராஜ் சிங் சௌஹான் இன்று ஆய்வு மேற்கொள்கிறார்.

------------

ஆந்திர மாநிலத்தில் பாதுகாப்புப் படை வீரர்களின் கிராம ஊராட்சி வரம்புக்குள் வரும் சொத்துகளுக்கு வரிவிலக்கு வழங்கப்படுவதாக அம்மாநில அரசு அறிவித்துள்ளது.

------------

திருப்பூர் மாவட்டம் பஞ்சலிங்க அருவியில் வெள்ளப்பெருக்கு காரணமாக சுற்றுலாப் பயணிகள் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

------------

காஞ்சிபுரம் மாவட்டத்தில் கடந்த 2022ஆம் ஆண்டு முன்னாள் படை வீரர் கொடிநாளுக்காக 5 லட்சம் ரூபாய்க்கும் மேல் நிதி வசூல் செய்த கூட்டுறவுத்துறை இணைப் பதிவாளர் ஜெயஸ்ரீக்கு ஆளுநரின் பாராட்டு சான்றிதழை ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் வழங்கினார்.

------------

முக்கடலும் சங்கமிக்கும் கன்னியாகுமரி தீர்த்தக்கடலில் சித்ரா பௌர்ணமியை ஒட்டி நேற்று மகா சமுத்திர ஆரத்தி நிகழ்ச்சி நடைபெற்றது.

------------

திருப்பதி ஏழுமலையான் கோவிலில் பௌர்ணமி கருடசேவையை ஒட்டி தங்கக் கருட வாகனத்தில் நம்பெருமாள் வீதி உலா நடைபெற்றது.

------------

சித்ரா பௌர்ணமியை ஒட்டி ஸ்ரீரங்கம் அருள்மிகு ரங்கநாத பெருமாள், அம்மா மண்டபத்தில் எழுந்தருளி, நடைபெற்ற கஜேந்திர மோட்ச நிகழ்ச்சியில் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்றனர்.

------------

நாமக்கல் மாவட்டம் ராசிபுரத்தில் பிரசித்தி பெற்ற அருள்மிகு பொன் வரதராஜ பெருமாள் மற்றும் கைலாசநாதர் கோயில்களின் சித்திரைத் திருவிழா தேரோட்டம் விமரிசையாக நடைபெற்றது.

------------

*விளையாட்டுச் செய்திகள்*

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டி வரும் 17ஆம் தேதி மீண்டும் தொடங்கும் என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் அறிவித்துள்ளது.

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை காரணமாக, இந்தியா - பாகிஸ்தான் இடையே பதற்றம் ஏற்பட்டதைத் தொடர்ந்து கடந்த 9ஆம் தேதி முதல் ஐ.பி.எல். போட்டிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டன.

மே 17ஆம் தேதி பெங்களூருவில் நடைபெறும் ஆட்டத்தில் கொல்கத்தா – பெங்களூரு அணிகள் விளையாடும் என்றும், மொஹாலி அல்லது தரம்சாலாவில் எந்தப் போட்டிகளும் நடைபெறாது என்றும் பி.சி.சி.ஐ. அறிவித்துள்ளது.

அகமதாபாதில் நடைபெற இருந்த மும்பை – பஞ்சாப் அணிகளுக்கு இடையேயான ஆட்டம் ஜெய்ப்பூரில் வரும் 26ஆம் தேதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பிளே ஆஃப் சுற்றுப் போட்டிகள் வரும் 29ஆம் தேதி முதல் நடைபெறும் என்றும், இறுதிப் போட்டி அடுத்த மாதம் 3ஆம் தேதி நடைபெறும் என்றும் பி.சி.சி.ஐ. அறிவித்துள்ளது.

------------

தாய்லாந்து ஓபன் பேட்மிட்டன் போட்டி பாங்காக்கில் இன்று தொடங்குகிறது.

இப்போட்டியில் இந்தியாவின் லக்ஷயா சென், ப்ரியன்ஷு ரஜாவத், மால்விகா பன்சோட், உன்னத்தி ஹூடா உள்ளிட்ட முன்னணி வீரர்கள் பங்கேற்கின்றனர்.

<<<<>>>>